ஊடக அறிவித்தல் - இல. 28

தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

**அஞ்சல் மூல வாக்களிப்பு வசதிகள் மற்றும்உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம்**

2020 பாராளுமன்றத் தேர்தலில் அஞ்சல் மூல வாக்குச் சீட்டு விநியோகம், அஞ்சல் மூல வாக்கினை அடையாளமிடுதல் மற்றும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகம் தொடர்பான நடவடிக்கைகள் ஏற்கெனவே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

02. அஞ்சல் மூல வாக்காளர் பட்டியலை உறுதிப்படுத்தும் திகதியாக **2020 ஜூன் மாதம் 18** ஆந் திகதி நியமிப்பதற்கும், அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்களின் விநியோகம் மற்றும் அவற்றைத் தபாலில் சேர்த்தல் **2020 ஜூன் 30, ஜூலை 01, 02 ஆந்** திகதிகளில் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

03. இதன் பிரகாரம் அரச நிறுவனங்களிலுள்ள (மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் திணைக்களம், பாதுகாப்புப் பிரிவு, சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் ஆகியவை தவிர) அஞ்சல் மூல வாக்காளர்களின் வாக்கு அடையாளமிடல் **2020.07.14 மற்றும் 2020.07.15 ஆந் திகதிகளில்** மேற்கொள்ளப்பட உள்ளதோடு, மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் திணைக்களம், பாதுகாப்புப் பிரிவு, சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றின் அஞ்சல் மூல வாக்காளர்களின் வாக்கு அடையாளமிடல் **2020.07.16 மற்றும் 2020.07.17 ஆந் திகதிகளில் நண்பகல் 12.00 மணி வரை** மேற்கொள்ளப்படும். இத்தினங்களில் அஞ்சல் மூல வாக்காளர்கள் தமது வாக்கினை அடையாளமிட முடியாது போனால், அவர்களுக்காக **2020.07.20 மற்றும் 2020.07.21 ஆந் திகதிகளில்** தமது கடமை நிலையங்கள் அமைந்துள்ள மாவட்டத்தில் உள்ள மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் தமது அஞ்சல் மூல வாக்கினை அடையாளமிடுவதற்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

04. 2020 பாராளுமன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைத் தபாலில் சேர்க்கும் நடவடிக்கைகள் **ஜூலை மாதம் 11, 12, 13 ஆந் திகதிகளில்** மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

05. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகம் **2020.07.29** ஆந் திகதி பூர்த்தி செய்யப்படல் வேண்டும். **2020.07.29** ஆந் திகதியின் பின்னர் தமது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாத வாக்காளர்கள் 2019 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் பெயர் பதியப்பட்டுள்ள முகவரிக்குரிய விபரங்களுடன் தபாற்கந்தோருக்குச் சென்று தமது ஆளடையாளத்தை நிரூபித்த பின்னர் குறித்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மகிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய
2020.06.16